# <u>தானாக செயலிழக்கும் சிறிஞ்களை களஞ்சியப்படுத்தும் போதும் இடமாற்றும் போதும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள்</u>

## *A) களஞ்சியப்படுத்தலின்போது*

1. சுத்தமான, உலர்ந்த, பூச்சி புளுக்கள் அற்ற காற்றோட்டமான இடத்தில் களஞ்சியப்படுத்தல் வேண்டும்.

2. அதிக வெப்பத்திற்கோ, நேரடி சூரிய ஒளிபடுதலிற்கோ உட்படாதவாறு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். வெப்பத்தினால் சிறிஞ் அடைக்கப்பட்டுள்ள பைகள் நிறமாற்றத்திற்கு உட்படுவதோடு சிறிஞ்களின் சில பகுதிகள் பழுதடைகின்றன.

3. அமிலங்கள் மற்றும் அரிக்கும் தன்மையான இரசாயணப் பொருட்களுடன் ஒன்றாக களஞ்சியப்படுத்தலாகாது. இதனால் சிறிஞ்சுகளின் உலோகத்திலாலான பகுதிகள் அரிப்பிற்குள்ளாவதை தவிர்த்துக் கொள்ளலாம்.

4. சிறிஞ் கொண்ட பெட்டிகளை நிலத்தில் நேரடியாக வைப்பதனால் நில ஈரலிப்பினால் பெட்டிகளில் பங்கஸ் வளர ஆரம்பிக்கும். எனவே இவற்றை நேரடியாக நிலத்தில் வைக்காது பலகைகளினாலான அல்லது உலோகத்திலாலான தட்டுக்களில் அடுக்கி வைத்தல் வேண்டும். இதனால் பூச்சிகள் பெட்டிகளினுள் சென்று சிறிஞ் பைகளை அரிப்பதைக் குறைக்கலாம்.

5. தட்டுக்களின் மேல் பெட்டிகளை அடுக்கும்போது பெட்டிகளிற்கும் சுவரிற்கும் இடையில் குறைந்தது 6 அங்குல இடைவெளி இருத்தல் வேண்டும். இதனால் பூச்சிகள் சுவரிலிருந்து பெட்டிகளினுள் செல்வதை தவிர்த்துக் கொள்ளலாம்.

6. சுலபமாக கையாள்வதற்கு, கிரமமான முறையில் பெட்டிகளை பரிசோதிப்பதற்கு ஏதுவான உயரத்தில் பெட்டிகளை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். (பொதுவாக 6 – 7 அடி உயரத்திற்கு

மேற்படலாகாது). ஒவ்வொரு நிரல்களுக்கு இடையிலும் சிறிய இடைவெளிகள் பேணப்படல் வேண்டும்.

7. பெட்டிகளை கையாள்வதற்கு, காவுவதற்கு கொழுக்கிகளையோ கூரான உபகரணங்களையோ பாவித்தலாகாது. இவ்வாறான உபகரணங்கள், நுண்ணங்கிகள் இல்லாதவாறு அடைக்கப்பட்ட பைகளை கிழிவுறச் செய்யலாம்.

8. உற்பத்திதிகதி, காலாவதிதிகதி, தொகுதி இலக்கம், உற்பத்தி நிறுவனம், கிடைக்கப்பெற்ற திகதி மற்றும் சிறிஞ் அளவுகள் போன்றவற்றைக் கொண்டு இலகுவில் வேறுபடுத்த ஏதுவாக வெவ்வேறான நிரல்களில் அடுக்கப்படுதல் வேண்டும்.

9. காலாவதி திகதிகளை அடிக்கடி பரிசோதிப்பதன் மூலம் கிட்டிய காலாவதித் திகதியுடைய சிறிஞ்களை முதலில் பாவிக்க முடியும்.

10. திறக்கப்பட்ட அல்லது குறையாக உள்ள பெட்டிகளை முதலில் பாவித்தல் வேண்டும்.

11. களஞ்சியஅறை மற்றும் தட்டுக்கள் குறைந்தது மாதத்தில் ஒருதடவை சுத்தம் செய்யப்படல் வேண்டும். அத்தோடு சகல பெட்டிகளிலும் ஈரலிப்பு, பங்கஸ் தொற்று, பூச்சிகளின் தாக்கம் போன்றவை பரிசீலிக்கப்படல் வேண்டும்.

### *B) இடமாற்றம் / விநியோகத்தின்போது*

சிறிஞ்சுகள் பொதி செய்யப்பட்ட மூலப் பெட்டிகளிலேயே விநியோகிக்கப்படல் வேண்டும். சிறிஞ்சுகள் பெட்டிகளிலிருந்து பிரிக்கப்பட்டுதலோ புதிய பெட்டிகளில் கைகளால் அடுக்கப்படுதலோ வேறு பைகளில் இடப்படுதலோ தவிர்க்கப்படல் வேண்டும். கைகளால் கையாளும் போது சிறிஞ்சுகள் அடைக்கப்பட்ட பைகளில் சேதங்கள் ஏற்படுவதோடு நுண்ணங்கிகளின் தொற்றுக்கு ஏதுவாக அமைகின்றது.

## C) பாவனையின் போது :-

1. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுத்தமான அலுமாரிகளில் வைத்து பேணப்படல் வேண்டும். பூச்சிகளின் தாக்கத்தை தவிர்க்க புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகை போன்றவற்றுடன் ஒன்றாக வைத்தலாகாது.

2. பணிமனையில் / நிலையத்தில் உள்ள சிறிஞ் அடைக்கப்பட்ட பைகள் மற்றும் சிறிஞ் போன்றவற்றில் நிறமாற்றம், பங்கஸ் தொற்று, பூச்சிகளின் தாக்கம் சம்பந்தமாக அடிக்கடி அவதானம் செலுத்துதல் வேண்டும்.

3. சிகிச்சா நிலையத்திற்கு விநியோகிக்கமுன் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக அவதானம் செலுத்தல் வேண்டும். மேற்படி விடயங்கள் அவதானிக்கப்படும் சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளரின் கவனத்திற்கு கொண்டுவரல் வேண்டும்.

4. நிர்ப்பீடணம் வழங்கும் சந்தர்ப்பங்களிலேயே சிறிஞ்சானது பெட்டியிலிருந்து எடுக்கப்படல் வேண்டும்.

5. கைகளினால் தொடுகைக்குட்பட்ட, மேசையில் வைக்கப்பட்ட அல்லது வேறு பைகளில் அல்லது பெட்டிகளில் இடப்பட்ட சிறிஞ்கள் மீள மூலப்பெட்டியில் உள்ள சிறிஞ்களுடன் ஒன்றாக்கக் கூடாது.

6. தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள / தரம் சம்பந்தமாக ஒரு தொகுதியை மீளப்பெற வேண்டிய சந்தர்ப்பங்களில் தகவல்களைத் திரட்ட இருப்புக் கையேடு, விநியோகப் பதிவேடு போன்றவை சரியான முறையில் பேணப்படுவதுடன் பெற்றுக்கொண்ட திகதி, விநியோக திகதி, தொகுதி இல, உற்பத்திதிகதி, காலாவதித்திகதி போன்றவையும் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.